# வி. பி. சிங், 25 எம். பி.க்கள் கைதாகி விடுதலை!

(புதுடில்லி)
முன்னாள் இந்தியப் பிரதமரும், ஜனதா தள் தலைவருமான வி. பி. சிங் மற்றும் 25 பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று அயோத்தியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். ஆயிரத்துக்கு மேற்பட்ட
(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 06 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 13 இதழ்: 260
யாழ்ப்பாணம் புதன்கிழமை 30-10-1991

## ‘சார்க்’ மாநாட்டில் ராவ் கலந்துகொள்வார்

(புதுடில்லி)
அடுத்தமாதம் 7-ம் திகதி ஆரம்பமாகவுள்ள "சார்க்" உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கலந்து கொள்வாரென அறிவிக்கப்பட்டுள்ளது.
திரு நரசிம்மராவ் கலந்து கொள்ள மாட்டார் என சில
(4ம் பக்கம் பார்க்க)

## 13,000 பொலிஸார் கொழும்பில் பணியாற்றுவர்

(கொழும்பு)
'சார்க்' உச்சி மாநாட்டின் போது 13 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுவர். விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாருடன் இணைந்து பணியாற்றுவர்.
கொழும்பில் ஆயிரம் பொலிஸாரும், மாநாட்டுத் தலைவர்கள் வருகை விஜயம் செய்யும் போது இங்கு 3
(2-ம் பக்கம் பார்க்க)

# ● புலிகளின் தாக்குதலில் திருமலை, அம்பாறைபகுதிகளில் பன்னிரண்டு படையினர் பலி!

## ஆயுதங்கள்மீட்பு 4 படையினரைகாணவில்லை!

(திருமலை)
**திருமலை, அம்பாறை மாவட்டங்களில் நேற்று விடுதலைப்புலிகள் நடத்திய இருவேறு தாக்குதல்களில் பன்னிரண்டு படையினர் பலியானார்கள். இராணுவ சிப்பாய் ஒருவரும் மூன்று ஊர் காவல் படையினரும் காணமல் போய்விட்டார்கள். பல நவீனரக ஆயுதங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.**

திருமலை மாவட்டத்திலுள்ள செனிநுவரவிற்கும் அகிபுச் சந்திக்கும் இடையில் நேற்றுக் காலை 7.00 மணியளவில் ரோந்து வந்த இராணுவத்தினரையும் ஊர்காவல் படையினரையும் வழிமறித்து புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.
இத்தாக்குதலில் 4 இராணுவத்தினரும் இராணுவத்துடன் கூடச்சென்ற 4 ஊர் காவற்படையினரும் கொல்லப்பட்டார்கள்.
விடுதலைப் புலிகளின் திடீர் தாக்குதலினால் 3 ஊர்காவற் படையினரும் ஒரு இராணுவமும் காணமற்போய்விட்டதாகவும் 2 இராணுவத்தினர் பலத்த காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
(2-ம் பக்கம் பார்க்க)

## மூன்று காவலரண்கள் முற்றாக அழிப்பு

(வவுனியா)
வவுனியா உலுக்குளம் பகுதியில் இராணுவத்தினரின் 3 காவலரண்கள் விடுதலைப் புலிகளினால் நேற்று முன்தினம் இரவு 11-15 மணியளவில் முற்றாக தாக்கி அழிக்கப்பட்டது.
விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் தமது ஆயுதங்களை போட்டுவிட்டு ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இம்மோதலில் விடுதலைப்
(4ம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணத்தில் பாரிய தாக்குதலுக்கு படையினர் முஸ்தீபு!

(மட்டக்களப்பு)
கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பெரும் இராணுவநடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள படையினர் தயாராகி வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
அம்பாறை மாவட்டத்தில் ஏற்கனவே இந்த நடவடிக்கை ஆரம்பமாகிவிட்டதாம். வெலிக்கந்தை, வடமுனை, தொப்பிகல பகுதிகளிலேயே இப்பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகவுள்ளதாம்.
இதற்காக கிழக்கில் பெருமளவு படைகள் குவிக்கப்பட்டுள்ளதுடன் விமானப்படையின் உதவியும் நாடப்பட்டுள்ளதாம். (இ)

## நான்கு சிப்பாய்கள் வடக்கில் தற்கொலை

(கொழும்பு)
வடபகுதி யுத்தமுனையில் இருந்த நான்கு இராணுவத்தினர் தற்கொலை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இச்சம்பவம் வவுனியாக் காட்டுப் பகுதியில் நடைபெற்றதாகத் தெரியவருகின்றது.
மேற்படி சிப்பாய்கள் என்ன காரணத்திற்காகத் தற்கொலை செய்தார்கள் என்பது பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (153)

## மண்டைதீவு கடலில் யுத்தக் கப்பல்

(யாழ்ப்பாணம்)
மண்டைதீவு கடற்பரப்பில் கடற்படைக்குச் சொந்தமான யுத்தக்கப்பல் நேற்றுக்காலை முதல் நங்கூரமிட்டு நிற்பதாகத் தெரியவருகிறது.
நேற்று மண்டைதீவுக்கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்களை நோக்கி படையினர் துப்பாக்கிப்பிரயோகத்தினை மேற்கொண்டனர். (56)

## அரசியல் வாதிகளுக்கு யுத்தம்பற்றி அக்கறையில்லை

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில் அரசப் படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்று வரும் யுத்தம் குறித்து தென்பகுதி அரசியல்வாதிகள் அதிக அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லையென பி. பி. ஸி. தனது இலங்கை அரசியல் பற்
(2-ம் பக்கம் பார்க்க)

## நிலைமையை பொறுத்து— க. பொ. த. (சா) பரீட்சை வட, கிழக்கில் நடத்தப்படும்

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு நிலைமையை பொறுத்தே க. பொ. த. (சாதாரண) பரீட்சை இப்பகுதிகளில் நடாத்தப்படும் என பரீட்சை ஆணையாளர்
(4-ம் பக்கம் பார்க்க)

## மூன்று கொள்ளையருக்கு நேற்று மரணதண்டனை

(யாழ்ப்பாணம்)
விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பெயரைப் பயன்படுத்திக் கொள்ளையில் ஈடுபட்ட மூவருக்கு, நேற்று அரியாலை, சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய இடங்களில் வைத்து மரண தண்டனை வழங்கப்பட்டது.
இம்மரணதண்டனை தொடர்பாக விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
இந்திய இராணுவம் தமிழீழத்தை ஆக்கிரமித்த காலப்பகுதியில், ஆயுதம் தாங்கிய ஓர் குழுவாகச் சுழிபுரம், தெல்லிப்பளை, கொக்குவில்
(4ம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு ஆதரவாக தமிழ் தேசிய மீட்புப் படை

(சென்னை)
தமிழகத்தில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக "தமிழ் தேசிய மீட்புப்படை" என்ற அமைப்பு இயங்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.
பழனியில் ரவி அல்லது ரவிச்சந்திரன் என்பவர் கைது செய்
(4ம் பக்கம் பார்க்க)

## மத்திய கிழக்கு சமாதான மாநாடு

(மட்ரிட்)
வரலாற்றுப் புகழ்மிக்க மத்தியகிழக்கு சமாதான மாநாடு இன்று ஸ்பெயின் தலைநகர் மட்ரிட்டில் ஆரம்பமாக
(4-ம் பக்கம் பார்க்க)

## தீபாவளி முற்பணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் உள்ள ஊழியர்களுக் கரக இயங்கும் யாழ். வைத்தியசாலை கூட்டுறவு ஊழியர் நலனிருத்திச்சங்கம் பங்கு இலாபத்திலிருந்து ஒவ்வொரு ஊழியருக்கும் ஆயிரம் ரூபா வீதம் வழங்கிவருகிறது.

இதேசமயம் யாழ் போதனா வைத்தியசாலை ஊழியர்களின் தீபாவளிப் பண்டிகை முற்பணம் 1500 கடந்த வாரத்திலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. (56)

## மழையினால் அகதிகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர்ப்பகுதிகளிலுள்ள தீவக அகதிகள் தொடர்ச்சியாகப் பெய்த மழையினால் அகதிமுகாம்களில் பல தரப்பட்ட அசௌகரியங்களுக்குள்ளாகியிருக்கின்றனர். (56)

## குழாய்க் கிணறு

(ஊர்காவற்றுறை)

யாழ்ப்பாணம் மடத்துவீதி மக்களின் குடிநீர் தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு திருவள்ளுவர் சனசமூக நிலையம் முன்பாக குழாய்க் கிணறு ஒன்று திறவப்பட்டுள்ளது. (59)

## தேவை

யாழ். நகரிலுள்ள பிரபல்யமான இந்துக் கோவிலுக்கு கீழ்குறிப்பிட்டுள்ள ஆட்கள் தேவை.

1. குருக்கள்
2. உதவி ஐயர்மார், மடப்பள்ளி ஐயர்.
3. பாதுகாப்பு சேவையாளர்

சுயவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

முடிவுத்திகதி:- 5-11-91

சம்பளம்;- பேசித்தீர்க்கப்படும்.

தொடர்பு:- விளம்பர இல. எ-1679
மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.

(எ-1679)

# இடம்பெயர்ந்த அகதி குடும்பங்களுக்கு கோப்பைகள் வழங்கப்பட்டன

(புங்குடுதீவு)

தீவுப்பகுதியில் ஏற்பட்டுள்ள இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் தங்கியிருக்கும் சுமார் இருநூற்றி ஏழு குடும்பங்களின் நன்மைகருதி தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரால் சாப்பாட்டு கோப்பைகள் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி அப்பகுதியில் தங்கியிருக்கும் குடும்பங்களில் சாப்பாட்டுக்கோப்பைகள் இல்லாதவர்களுக்கு முன்னுரிமை வழங்கி அதற்கேற்ற முறையில் விநியோகிக்கப்பட்டுள்ளது.

சுமார் முன்னூறுக்கு மேற்பட்டோருக்கு கோப்பைகள் வழங்கப்பட்டுள்ளன. (101)

# மேசைவிளக்கு வெளிச்சத்தில் அரச அதிபர் பணியாற்றினர்

(மானிப்பாய்)

யாழ். செயலகத்திலுள்ள பல காரியாலயங்களில் கடந்த 28ந் திகதி 'அரிக்கன்' லாம்பு மேசை விளக்கு ஆகியவற்றின் வெளிச்சத்தில் ஊழியர்கள் வேலை செய்தனர்.

நேற்று முன்தினம் முழு நாளும் தொடர்ந்து பெய்த அடைமழை காரணமாக செயலகம் ஒரே இருட்டாக இருந்தது. இதனால் அதியாவசியப் பிரிவுக்கான புனர்வாழ்வுப்பகுதியின் பல கிளைகளிலும் சிறுப்பர் அலுவலகம் ஆகியவற்றிலும் ஊழியர்கள் மேற்படி விளக்குகளின் வெளிச்சத்தில் பணிபுரிந்தனர்.

இதேவேளை யாழ். அரச அதிபரின் அலுவலகத்திற்கு மின்சாரம் கொடுத்துவந்த ஜெனரேற்றரும் பழுதடைந்ததினால் அரச அதிபரும் விளக்கு வெளிச்சத்திலேயே தமது பணிகளைச் செய்ததைக் காணக் கூடியதாக இருந்தது. (7

# அடையாள அட்டை பெற 10,000 படிவங்கள் விநியோகம்; 500 பேர் மட்டும் விண்ணப்பம்

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்தில் தேசிய அடையாள அட்டையைப் புதுப்பிப்பதற்கு இதுவரை 500 பேர் மட்டுமே விண்ணப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

1972, 73ம் ஆண்டுகளில் தேசிய அடையாள அட்டையைப்பெற்றுக்கொண்டவர்கள் மீண்டும் புதிய அட்டையைப் பெறுவதற்கு விண்ணப்பிக்க வேண்டுமென ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்ததைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் பத்தாயிரம் விண்ணப்பப் படிவங்கள் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களினூடாக ஒவ்வொரு கிராமசேவையாளர்களுக்கும் வழங்கப்பட்டது.

ஆனால் இதுவரை சுமார் 500 பேர் மட்டுமே இவற்றைப் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளதாக யாழ். ஆட்பதிவுத் திணைக்களத்தின் மூலம் தெரியவந்துள்ளது. (71)

# இந்தியாவிலிருந்து மலையகத்திற்கு 300 ஆசிரியர்கள்

(கொழும்பு)

மலையகத்தில் கல்வி கற்பிக்க 3 வருட ஒப்பந்த அடிப்படையில் இந்தியாவிலிருந்து 300 கணித - விஞ்ஞான ஆசிரியர்களை வரவழைக்க அமைச்சர் தொண்டமான் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

அண்மையில் தமிழகம் சென்ற அமைச்சர் தொண்டமான் இது குறித்தும் பேச்சுக்கள் நடாத்தியுள்ளார்.

வடக்கு-கிழக்கில் படித்த பெருமளவு தமிழ் இளைஞர், யுவதிகள் இருக்கையில் இந்தியாவிலிருந்து ஆசிரியர்களைத் தருவிப்பது குறித்து சில வட்டாரங்கள் அதிருப்தி தெரிவித்துள்ளன. (இ)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

நினைவுகள் மறைவதில்லை



செல்வன்

## பொன்னம்பலம் விபுலானந்தன்

அன்புக்குரிய கரங்களில்: 20-11-1969

அரக்கர்களின் கரங்களில்: 30-10-1986

[30-10-86ல் கோட்டை இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் கடமையின்போது - அகால மரணமடைந்த யாழ்/மத்திய கல்லூரி மாணவத் தலைவன்]

காலையிலே கல்லூரிக்கனுப்பிய மைந்தன் வரவை எண்ணி
வழிமேல் விழிவைத்து காத்திருக்கும் அன்னை!
செவிகளிற் கேட்டதே மரணஓலம்!
அவன் உடல்தான் ராணுவத்தால் அழிக்கப்பட்டாலும்
அவன் உள்ளம் அழிக்கப்படவில்லை
இன்றும் அவன் எம்முடன் வாழ்கின்றான்
எம் உணர்வுகளில் அவன் ஆத்மா ஒன்றித்துவிட்டது

பிரிவால் வாடும்;
பெற்றோர், சகோதர, சகோதரி,
மைத்துனிமார்.

64, கன்னாதிட்டி றோட்,
யாழ்ப்பாணம்.

(இ-5531)

## இராசி பலன்

30-10-1991

புதன்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 13)

அட்டமி பி. இ. 2-03 வரை, பூசம் முன்னிரவு 10-15 வரை. இராகுகாலம் நண்பகல் 1-20 முதல் 1-33 வரை, சுபநேரம் மாலை 4-33 முதல் 6-03 வரை, மரணயோகம்

மேடம்: வாக்கு வன்மை, அநாகரிக செயல், தொழில் பகை.

இடபம்: மகிழ்ச்சியான சம்பவம், புதிய உறவு, குடும்ப உல்லாசம்.

மிதுனம்: அஞ்ஞானவாசம், தொழில் நஷ்டம், மறதி.

கடகம்: எதிர்பாராத பணவரவு, தொழில் லாபம், வெற்றி.

சிம்மம்; மனைவியால்துயரம். வீண்செலவு, அவசர முடிவு,

கன்னி: விருந்தினர் வருகை, மனநிறைவு, தொழில் உறவு.

துலாம்: அமைதியான நிலை, இனசன உதவி, பொதுப்பணி.

விருச்சிகம்: கருத்துமோதல், எதிர்பாராத பயணம், துன்பம்.

தனுசு: மறைந்த வாழ்வு, குடும்பத்தகராறு, கடுஞ்சினம்.

மகரம், சுபச்செய்தி, பணவரவு, குடும்ப சுகம்.

கும்பம்: கடமையுணர்வு, அதிகாரிகள் பாராட்டு, காரியசித்தி.

மீனம்: குடும்ப வெறுப்பு, கடன்தொல்லை, அலைச்சல்.

ஜோஸ்யர்

## புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதலில் ரி 56 இரண்டு ரக துப்பாக்கி-2, ரவைக்கூடுகள்-10, 7.62 ரக நடுத்தர ரவைகள்-420, ஜே. ஆர். ரக கைக்குண்டு-1, 303 ரகதுப்பாக்கி-1, ரவைக்கூடுகள்-4 போன்ற ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

இதேவேளை, நேற்றுக் காலை 9-40 மணியளவில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள 36ம் கொலனி இராணுவ முகாமிலிருந்து 200 யார் தூரத்தில் இருக்கும் சிங்கள மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கிக்கொண்டிருந்த 6 இராணுவத்தினரை நோக்கிப் புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

இத்தாக்குதலில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், இருவர் காயங்களுடன் தப்பி ஓடினார்கள்.

இச்சம்பவத்தில் ஏ.கே. எம். எம். ஜிரகத்துப்பாக்கி-1, அதற்குரிய மகசீன்-5 ரி 56 ரகத் துப்பாக்கி-8, அதற்குரிய மகசீன்கள்-12, ஏ கே எல்.எம். ஜி. விக்கர்-500, தொலைநோக்கி-1, ஜே.ஆர். கைக்குண்டு-1, ரவைகள்-700 ஆகிய ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இதேநேரம் அம்பாறை மாவட்டத்தில் உள்ள 14ம் கிராமம் என்ற இடத்தில் நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகளும், இராணுவத்தினரும் எதிர்பாராதவிதமாகச் சந்தித்தபோது மோதல் ஏற்பட்டது.

இம்மோதலில் புலிகள் தரப்பில் மாறன் (சுப்பிரமணியம் நாகப்பன், கொம்மாந்துறை) வீர மரணமடைந்தார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (பி-153-க)

## ஊன்றுகோல்களை ஒப்படைக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் சத்திரசிகிச்சைப் பகுதியிலிருந்து ஊன்றுகோல்களை எடுத்துச்சென்ற நோயாளர்களில் அவற்றை பாவனை முடிந்தவர்கள் போதனா வைத்திய சாலை மின் ஒழுங்கு தொழிற் சாலையில் கொண்டுவந்து ஒப்படைக்கும்படி கோரிக்கை விடப்பட்டுள்ளது. தொழிற் சாலையில் தற்போதைய சூழ்நிலையில் மரத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதனால் போதிய அளவு உற்பத்தி செய்யமுடியாதுள்ளதாக பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரட்ணம் தெரிவித்துள்ளார்.

## அரசியல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றிய தனது கணிப்பில் தெரிவித்துள்ளது.

அரசியல்வாதிகள் தமக்கிடையே ஏற்பட்டுள்ள கருத்து மோதல்களில் கூடிய கவனம் செலுத்துவதாலேயே வடக்கு-கிழக்கு யுத்தம் குறித்து அதிக அக்கறை காட்டுவதில்லை எனவும் பி. பி. ஸி, தெரிவித்துள்ளது. (க)

## 13,000

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரம் பொலிஸாருமாக கடமையிலீடுபடவுள்ளனர்.

உச்சி மாநாட்டிற்கான சிரேஷ்ட அதிகாரிகள் வரத் தொடங்கியதை அடுத்து கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

## "கஷ்டமடைந்த மக்களும் ஓரளவு உணவுப்பொருள்களை கட்டுப்பாட்டு விலையில் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன"

- பரா

(யாழ்ப்பாணம்)

இன்று கட்டுப்பாட்டு விலையில் எல்லா கஷ்டமடைந்த மக்களும் ஓரளவு உணவுப் பொருட்களை பெறக்கூடிய வகையில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்இந்துக்கல்லூரியில் நடந்த யாழ். மாவட்டவர்த்தகர்களுக்கானகலந்துரையாடலின் போது தமிழீழ மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்பு பொறுப்பாளர் பரா இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: "எமது தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடங்கி 15 வருடங்களுக்கு மேலாக இப் போராட்டத்திற்கு ஏற்பட்ட செலவில் பெரும்பங்கை தந்து உதவியவர்கள் பெரும் பங்கு வர்த்தகர்களாகிய உங்களுடையது தான் என்பதை நாம் மறக்கவில்லை. எமது போராட்டம் வளர்ச்சியடைவதற்கு இனிமேலும் உதவி செய்ய வேண்டியவர்கள் நீங்கள்தான். இன்று எமது மக்களை பட்டினி போட அரசாங்கம் திட்டமிட்டு உணவுப்பொருட்களை இங்கு அனுப்பாது தடைசெய்கின்றது. இதன்காரணமாக எம்மக்கள் பட்டினிச்சாவைக் கூட எதிர்நோக்கலாம். இதை தடுக்கும் முகமாகவும் எம்மிடம் இருக்கின்ற உணவுப் பொருட்களை நீண்டகாலத்திற்கு அரசு என்ன தடையை விதித்தாலும் மக்களுக்கு ஒழுங்கான முறையில் சமமாக எல்லோருக்கும் உணவு கிடைக்கவே இவ் உணவுப் பொருட்கள் அத்தியாவசியப் பொருட்களாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன.

தனியார் விற்பனையாளர்களாகிய உங்களிடம் இவ்வத்தியாவசிய பொருட்களை விற்க வேண்டாம் என்று நாம் கூறியது, உங்களுடைய பொருட்களை நாம் பறிமுதல் செய்வதற்கல்ல. பதுக்கலைக் கட்டுப் படுத்துவதற்கும் அன்றாடம் வேலையற்றிருக்கும் மக்களுக்கு முடிந்தளவு உணவுப் பொருட்களை பெறக்கூடியதற்குமேயாகும்.

அரசாங்கம் நீண்டகாலத்திற்கு எமக்கு உணவுப் பொருட்களை அனுப்பாது விடலாம். இங்கே இருக்கின்ற உணவுவகைகளை தமிழ் மக்கள் எல்லோரும் ஒரு தாய் பிள்ளை போல் பகிர்ந்து உண்ணவேண்டும். மக்களுக்காக அவர்களின் விடிவுக்காக போராட புறப்பட்ட நாம் எமது மக்கள் பட்டினியால் சாக நேரும் போது அதை நாம் அனுமதிக்கமுடியாது. எம்மிடமுள்ள உணவையும் பசியால் வரும் மக்களுக்கு கொடுக்க தயங்கமாட்டோம்.

இன்றைய நெருக்கடி நிலையில் ஒருவர் உணவை சாப்பிட்டுக்கொண்டு ஒருவர் சாப்பிடாமல் இருக்க நாம் வழிவகை செய்யக்கூடாது என்பதற்காகவே இவ் அத்தியாவசிய பொருட்களை பொதுவிநியோகம் என்ற அடிப்படையில் கூட்டுறவு சங்கங்களூடாக நாம் விநியோகிக்கின்றோம்.

அடுத்து நாம் வரி அறவிடுவதைப் பற்றியும் மண்மீட்பு நிதி பெறுவது பற்றியும் உங்களில் சிலருக்கு தாக்கங்கள் சந்தேகங்கள் இருக்கலாம் இந்த போராட்டத்தின் உண்மை நிலையை நீங்கள் உணரவேண்டும். இப்போராட்டத்திற்கு ஒருநாளில் போராளிகளை பராமரிப்பதற்கு சாதாரணமாக 8 கோடி ரூபா செலவாகின்றது. இதில் ஒரு பகுதியைத் தான் உங்களிடமிருந்து பெறுகிறோம்.

2 லட்சத்து 30ஆயிரம்வரையிலான குடும்பங்கள் யாழ். மாவட்டத்தில் வாழ்கிறார்கள். இவர்களில் ஒருலட்சம்குடும்பத்திடமே பவுண் வாங்க தீர்மானித்தோம். அதில் 65ஆயிரம் குடும்பங்களிடமே இதுவரை பவுண் வாங்கியுள்ளோம். ஒரு லட்சம்பேரும் பவுண் தந்தால் நாம் அதை ஒரு மூலதனமாக வைத்து எம்மக்கள் மீது அதிக பணியை சுமத்தமாட்டோம். அதுமட்டுமல்ல வாங்கப்படுகின்ற பவுணை கட்டாயம் திருப்பி அளிப்போம்.

இவ்வளவு கஷ்டங்கள் மத்தியிலும் எங்களுடன் சேர்ந்து வாழ்கின்ற மக்களில் நீங்களும் ஒரு பகுதியினர் தான். இப் போராட்டத்தின் பங்காளிகளாகவும் நீங்கள் இருக்கிறீர்கள். இருப்பினும் இங்கே வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற மக்களும் தமிழ் மக்கள் தான். அவர்களுக்கு வேண்டிய பொருட்களை பதுக்காது அவர்கள் உயிர் வாழ்வதற்கு உங்களிடம் இருக்கும் பொருட்களை கொடுத்து உதவ வேண்டும். இம்மக்களின் நலனுக்காக நீங்களும் சில கஷ்டங்களை அனுபவித்தாலும் உதவி செய்வீர்கள் என எதிர்பார்க்கிறோம்."

இக்கலந்துரையாடலில் தமிழீழ நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி, யாழ் மாவட்டமக்கள் உறவு கொள்கைமுன்னெடுப்பு பொறுப்பாளர் இளம்பரிதி (ஆஞ்சனேயர்) ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

## இடநெருக்கடியால் 119 அகதி குடும்பங்கள் இடமாற்றம்

(புங்குடுதீவு)

தீவுப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து யாழ். மகளிர் பாடசாலையில் தங்கியிருந்த புங்குடுதீவு, வேலணை பகுதிகளைச் சேர்ந்த சுமார் நூற்றிபத்தொன்பது குடும்பங்கள் இடநெருக்கடி காரணமாக திடீரென யாழ். சுந்தரமடத்திலுள்ள இந்து மகளிர் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இவர்களுக்கு உடனடியாக உணவுத்தேவைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், சர்வோதயமும் மேற் கொண்டுள்ளன.

இப்பாடசாலைக்கு திடீரென மாற்றப்பட்டுள்ளதால் அங்கு உடனடியாக சமையல் வேலைகளை செய்ய முடியாத நிலையில் இக்குடும்பங்களுக்கு காலையில் பாண், மதிய உணவாக சமைத்த உணவுப் பார்சல்கள் மேற்படி நிலையங்களினால் வழங்கப்பட்டுள்ளது. (101)

## ★ 9 நாடுகள் பங்குபற்றும் உலகக்கிண்ண கிரிக்கெட் மார்ச்22ல் ஆஸியில் ஆரம்பம்

(மெல்போர்ன்)

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான கால அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியாவிலும் - நியூஸிலாந்திலும் இப்போட்டிகள் நடைபெறவுள்ளது.

இம்முறை தெ. ஆபிரிக்க அணியுடன் 9 நாடுகள் இப் போட்டியில் பங்குபற்றுகின்றன. அவுஸ்திரேலிய நகரான பேர்த்தில் 1992 பெப்ரவரி மாதம் 22ம் திகதி ஆரம்பமாகும் முதலாவது போட்டியில் இந்தியா-இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன.

பெப்ரவரி 28ம் திகதி மக்கே நகரில் இலங்கை அணி இந்தியாவை எதிர்த்தும், மார்ச் 1ம் திகதி பிறிஸ்பேனில் அவுஸ்திரேலிய அணியை எதிர்த்து இந்தியாவும் மோதுகின்றன. மார்ச் 3ம் திகதி டிட்னியில் இந்தியாவை எதிர்த்து பாகிஸ்தான் மோதுகின்றது.

இந்திய அணி பங்குபற்றும் இறுதி லீக் போட்டி தென். ஆபிரிக்காவுக்கு எதிராக மார்ச் 15ம் திகதி நடைபெறும் இந்தப்போட்டியின் அரை இறுதி ஆட்டங்கள் மார்ச் மாதம் 21ம் 22ம் திகதிகளில் ஒக்லண்ட் (நியூஸிலாந்து) சிட்னி (அவுஸ்திரேலியா) யில் நடைபெறும் இறுதிப்போட்டி மார்ச் 25ம் திகதி மெல்போர்னில் (அவுஸ்திரேலியா) நடைபெறும். (பி-வி)

## உடல் உறுப்புகள் விற்பனையை தடுக்க இந்தியாவில் சட்டம்

(புதுடில்லி)

இந்தியாவில் மனிதஉடல் உறுப்புக்கள் விற்பனை செய்யப்படுவதைத் தடுக்க விரிவான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படவிருக்கிறது.

உயிருடன் இருப்பவர்களின் உறுப்புக்கள் அகற்றப்படுவதை வரன்முறைப்படுத்தவும் இந்தச் சட்ட மூலத்தில் வகை செய்யப்படவிருக்கிறது.

இது தொடர்பாக ஒரேமாதிரியான சட்டம் இருக்கவேண்டுமென்று நேற்று புதுடில்லியில் கூடிய மத்திய அமைச்சரவை கருதியுள்ளது.

இதுவரையிலும் கண்கள், சிறுநீரகம், செவிப்பறை ஆகியவற்றை தானம் செய்வது தொடர்பாகதான் சிலமாநில அரசுகளும், டில்லி யூனியன் பிரதேசங்களும் சட்டமியற்றியுள்ளன. இப்போது கொண்டுவரப்படவிருக்கும் சட்டத்தின் கீழ். 18 வயதுக்குக் குறைந்தவர்களின் உடல்களிலிருந்து உறுப்புக்களை அகற்றுவது தடைசெய்யப்படுகிறது.

மேலும் மனித உறுப்புக்களை வர்த்தகம் செய்வது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படவிருக்கிறது. (மா)

## இராணுவ நடவடிக்கையால் தீவகத்தில் இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள் பூட்டப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் கடந்த வருடம் ஆவணி மாதத்தில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையினைத் தொடர்ந்து இன்றுவரையில் நூற்றுக்கு மேற்பட்ட இந்து, கிறிஸ்தவ தேவாலயங்கள் எதுவித பூசைகளுமின்றி பூட்டப்பட்டுக்கிடக்கின்றது.

ஊர்காவற்றுறையில் பிரபல்ய தேவாலயங்களான புனித அந்தோனியார் ஆலயம், சூசையப்பர் ஆலயம், செபஸ்தியார் ஆலயம், அன்னை வேளாங்கன்னி ஆலயம், சைவ ஆலயமான சிவன் ஆலயம், காளி அம்மன் ஆலயம், முருகமூர்த்தி ஆலயம் போன்றவை ஒன்றரைவருடத்திற்குமேலாக பூசைகள், திருவிழாக்கள் எதுவுமின்றி இராணுவ நடவடிக்கைக்குள் சிக்கியுள்ளன.

இதேபோல் புங்குடுதீவில் 35 இந்து, கிறிஸ்தவ ஆலயங்களும், வேலணைப் பகுதியில் 20 ஆலயங்களும், மண்டைதீவில் 20க்கு மேற்பட்ட ஆலயங்களும், வேலணையில் 30க்கு மேற்பட்ட ஆலயங்களும் எதுவித பூசைகளுமற்ற நிலையில் இப்போது காணப்படுகின்றன.

எழுவைதீவு, அனலைதீவு, காரைநகர், நயினாதீவு ஆலயங்களிலும் வழக்கமான பூசைகள் இடம்பெறுமல் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (55)

## மீனவர்கள் அச்சம்

(ஊர்காவற்றுறை)

செம்பியன்பற்றுக்கு அடுத்ததாகவுள்ள மாமுனைகிராமத்து மீனவர்கள் கடற்படையினரின் கெடுபிடிகால் தொழிலுக்கு செல்லஅச்சம் கொண்டுள்ளனர்.

அண்மையில் கடற்படையினரின் துப்பாக்கி சூட்டுக்கு சில மீனவர்கள் பலியாகியது குறிப்பிடத்தக்கது. (56)

## யாழ்ப்பாணக் கல்லூரி இரு ஆட்டங்களில் வெற்றி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும். சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் 'ஏ' பிரிவு ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. மற்றைய இரு பிரிவுகளிலும், யாழ்ப்பாணக் கல்லூரிவெற்றிபெற்றது.

முதலில் நடைபெற்ற 'ஸி' பிரிவு ஆட்டத்தில் யாழ்ப்பாணக்கல்லூரி 2-0 கோல்களாலும், 'பி' பிரிவு ஆட்டத்தில் 1-0 கோல் களாலும் யாழ்ப்பாணக்கல்லூரி வெற்றி பெற்றது. 'ஏ' பிரிவு ஆட்டத்தில் இரு கல்லூரிகளும் தலா ஒரு கோல் போட்டமையால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிமைதானத்தில் நடைபெற்ற இவ் ஆட்டங்களுக்கு திருவாளர்கள் பி.ஆர். தப்பிரயகம், எம். பிரான்ஸிஸ், ஜி. எ. செபஸ்தியாம் பிள்ளை ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர். (வி)

## கடல் கொந்தளிப்பு: பொருட்கள் இறக்குவது தாமதமாகலாம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைக் கடற்பகுதிக் கடல் காற்றுடன் சேர்ந்து கொந்தளிப்பு அதிகரித்துக் காணப்படுவதால் அங்கு வருகின்ற கப்பலிலிருந்து பொருட்களை இறக்குவதில் காலதாமதம் ஏற்படலாமெனக் கூறப்படுகிறது.

தொடர்ந்து மழை பெய்து வருவதால் பொருட்களை இறக்கும் ஊழியர்களும் சிரமங்களுக்குள்ளாகவேண்டிய நிலையும் ஏற்படுகிறது. (56)

## சங்கானையில் தமிழீழ காவல்துறை அலுவலகம்

(சித்தன்கேணி)

சங்கானையில் தமிழீழ காவல் துறையினரின் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உணவுப் பொருட்கள் வழங்குவதை தடைசெய்வதிலும் வாகனங்களில் அனுமதியின்றி உணவுப் பொருட்கள் கொண்டு செல்வதையும் தமிழீழ காவல்துறையினர் கண்காணித்து வருகின்றனர்.

வாகனங்களைமறித்து காவல்துறையினர் சோதனை மேற்கொள்வதைக் காணக் கூடியதாகவுள்ளது. [137]

## சம்பளம் வழங்கப்பட்டது

ஊர்காவற்றுறை)

வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாச ஊழியர்களுக்கு கடந்த 24-ந் திகதி முதல் ஆயிரம் ரூபா வீதம் சம்பளம் வழங்கப்பட்டது. கடந்த ஒருவருடகாலமாக வேலைக்கு வந்து பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கே இந்தச் சம்பளம் வழங்கப்பட்டது. (59)

## உதைபந்தாட்ட போட்டி

(உடுவில்)

சுன்னாகம் மத்திய சிற்றூர் அவையினரும் றோயல் விளையாட்டுக் கழகத்தினரும் இணைந்து மேஜர் காசி ஞாபகார்த்தமாக நடாத்தும் உதைபந்தாட்ட போட்டிகள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுவருகின்றன. இருபத்திநான்கு விளையாட்டுக் கழகங்கள் இப்போட்டியில் பங்குபற்றுகின்றன.

# "அரசாங்க திணைக்களங்களில் தமிழ்மொழி அமுலாக்கல் இன்னும் நடைபெறவில்லை"

## அமைச்சர் செல்லச்சாமி குற்றச்சாட்டு

(கொழும்பு)

"அரச திணைக்களங்களில் தமிழ்மொழி அமுலாக்கல் இன்னும் நடைபெறவில்லை. திணைக்களங்களின் தலைவர்களும், அதிகாரிகளும் இவ்விடயத்தில் அக்கறை காட்டுவதில்லை"

இவ்வாறு கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமி கொழும்பில் பத்திரிகையாளரிடம் தெரிவித்துள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்: "திணைக்களங்களிலிருந்து தமிழ் மக்களுக்கு தமிழ்மொழியில் கடிதங்கள் வருவதில்லை. இதற்கு, தமிழ் தட்டச்சு இயந்திரங்களும், போதிய தமிழ் ஊழியர்களும் இல்லையெனக் காரணம் கூறுகின்றார்கள். ஆனால் இது பற்றி திறைசேரிக்கு இன்னும் எதுவித அறிவித்தல்களும், எந்த ஒரு திணைக்கள அதிகாரியாலும் கொடுக்கப்படவில்லை.

1989ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 27 தமிழ் தட்டச்சு இயந்திரங்கள் தேவையென்றும் 1990ம் ஆண்டு வரவு-செலவில் 25 தமிழ் தட்டெழுத்தாளர் வெற்றிடங்கள் உண்டு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது ஒரு தவறான கணக்கெடுப்பாகும்" என்றும் அமைச்சர் கூறினார். (வி)

### மாணவர் உணவு முத்திரை

(மானிப்பாய்)

யாழ் சமூகசேவைத் திணைக்களத்தினால் மே, யூன், யூலை மாதங்களுக்குரிய மாணவர் மதிய உணவு முத்திரைகள் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் தற்பொழுது வழங்கப்படுகின்றது.

இதுவரை சாவகச்சேரி, மருதங்கேணி, கரவெட்டி உதவி அரசாங்க அதிபர்கள் இதனை பெற்றுச் சென்றுள்ளனர்.

### இலங்கையில் 226 லட்சாதிபதிகள்

(கொழும்பு)

இலங்கையில் 226 லட்சாதிபதிகள் இருப்பதாக புள்ளிவிபரம் ஒன்று தெரிவித்துள்ளது.

இவர்கள் வருடம் ஒன்றிற்கு 10 லட்சம் ரூபாவிற்கு மேல் வருமானமாக பெறுகிறார்கள். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு இவர்கள் தெரிவித்த தகவல்களிலிருந்து இது தெரியவந்துள்ளது. (ஐ)

### சார்க் தலைவர்களுக்கு விசேட சினிமா

(கொழும்பு)

'சார்க்' மாநாட்டில் கலந்து கொள்ள வருகைதரும் வெளிநாட்டுத் தலைவர்களுக்கும், குழுவினருக்கும் விசேட சினிமாக் காட்சிகள் காண்பிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தெரிவுசெய்யப்பட்ட சிறந்த திரைப்படங்கள் தினந்தோறும் காண்பிக்கப்படவுள்ளன. (ஐ)

### திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பிரிவு ஆரம்ப நீதிமன்ற திறப்பு விழா நாளை 31-ம் திகதி காலை 10-00 மணிக்கு சுன்னாகம் நாகம்ஸ் தியேட்டருக்கு முன்னாக அமைக்கப்பட்டுள்ள மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (வி)

### மூன்று

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய இடங்களில் பல வீடுகளில் கொள்ளை நடவடிக்கையில் ஈடுபட்டமைக்காகவும்;

இந்திய இராணுவம் தமிழீழத்தை விட்டு வெளியேறிய பின்னரும், தமது குழுவில் மேலும் சிலரை இணைத்து, ஆயுத முனையில் எமது இயக்கத்தின் பெயரைப் பாவித்து, துணவி, இணுவில், தாவடி, சண்டிலிப்பாய், அளவெட்டி, அராலி, கோண்டாவில், கலியங்காடு, தச்சன்தோப்பு ஆகிய இடங்களில் பல வீடுகளில் நகைகள், பணம் என்பவற்றைக் கொள்ளையிட்டமைக்காகவும், இதன் பின்னரும் பல கொள்ளைகளை நிகழ்த்திக்கொண்டு, கொள்ளைப் பொருட்களுடன் வெளிநாடு தப்பிச் செல்லத் திட்டமிட்டமைக்காகவும் இக்குழுவின் தலைவராகச் செயற்பட்ட கண்ணன் [ஜெயராசா நந்தகுமார் வயது [28] சுழிபுரம் கிழக்கு, சுழிபுரத்தைச் சேர்ந்தவருக்கு [தற்போது பிப்பிலிச் சுடலையடி மானிப்பாய்] சண்டிலிப்பாயிலும், செல்லத்துரை பராசசிங்கம் [ராஜன் வயது 38] ஸ்ரான்லி கல்லூரி வீதி,5/ , அனலைமேற்கு, அரியாலையைச்சேர்ந்தவருக்கு அரியாலை தபாற்கட்டைச் சந்தியிலும், கந்தசாமி உதயேந்திரன் [அப்புலிங்கம் வயது 20] அராலி வடக்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவருக்கு [தற்போது குருக்களவடி, ஆனைக்கோட்டை] சங்கானையிலும் எம்மால் மரண தண்டனை விதிக்கப்பட்டது. (வி)

### வவுனியாவில் ஹர்த்தால்

(வவுனியா)

வவுனியாவில் இன்று ஹர்த்தாலும், கடையடைப்பும் மேற்கொள்ளப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஹர்த்தாலை முஸ்லிம்கள் ஏற்பாடு செய்துள்ளதாகவும், இதற்கும் படையினரும் ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### உணவு விநியோக கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசிய உணவுப் பொருள் விநியோகம் சம்பந்தமாக ஒவ்வொரு ப. நோ. கூ. சங்கத்தின் தலைவரும் பொது முகாமையாளரும் கலந்து கொள்ளும் கலந்துரையாடல், ஒன்று இன்று யாழ். செயலகத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (வி)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிக் கல்விக் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன.

(நாளை) வியாழக்கிழமை பி. பகல் 1 மணிக்கு மட்டுவில், கைதடி, சாவகச்சேரி நகர், சாவகச்சேரி வடக்கு கொத்தணியில் கடமைபுரிபவர்களை சாவகச்சேரி றிபேக் கல்லூரி மண்டபத்திற்கும், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி பகல் 1 மணிக்கு உசன், வரணி, கொடிகாமம் கொத்தணிகளில் கடமைபுரிபவர்களை கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய மண்டபத்திற்கும் வருகை தரும் வண்ணம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

### வி. பி. சிங்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவாளர்கள் கலந்துகொண்ட ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றிற்கு தலைமை தாங்கிச் செல்லும் போதே இவர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சர்ச்சைக்குரிய முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்று இந்துக்களால் பொறுப்பேற்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாகவே மேற்படி ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

நால்வர் அல்லது அதற்கு கூடுதலானோர் ஒன்று கூடுவதை தடைசெய்யும் சட்டத்தை திரு. வி. பி. சிங் மீறினார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வி. பீ. சிங் உடன் தேசிய முன்னணியும் இடதுசாரிக் கூட்டணியையும் சேர்ந்தோரே கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில் மது தண்டவதே உட்பட பல தலைவர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டதாகவும், 70 வாகனங்கள் தீப்பற்றியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

### பொருள் விபரப் பட்டியலை சமர்ப்பிக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள சில்லறை, மொத்த வியாபாரிகள் தங்கள் கைவசமுள்ள அத்தியாவசியப் படுத்தப்பட்ட பொருட்களென பிரகடனப்படுத்தப்பட்ட பொருட்களின் விபரப் பட்டியல்களை மேற்படி உதவி அரச அதிபர் காரியாலயத்தில் நாளை 31-ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு முன்பாகக் கையளிக்க வேண்டுமென்றும் இவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் அவர்கள் கைவசமுள்ள பொருட்கள் பதுக்கப்பட்ட பொருள்களெனக் கருதப்படுமென்றும் யாழ்ப்பாண உதவி அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

### புதிய இடதுசாரி கூட்டணி உருவாகும் சாத்தியமில்லை

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் புதிய இடதுசாரிக் கூட்டணி ஒன்று உருவாகும் சாத்தியமில்லை என இடதுசாரிக் கட்சிகள் தெரிவித்துள்ளன.

திருமதி சிறிமா தலைமையில் எந்தவொரு கட்சியுடனும் இணையவோ கூட்டணி அமைக்கவோ மாட்டோம் என நவசமசமாஜக் கட்சிச் செயலாளர் டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

எனினும் பொதுப் பிரச்சினை ஒன்று ஏற்படும் பட்சத்தில் தாங்கள் இணைந்து செயற்படுவோமெனவும் அவர் கூறினார்.

## லலித், காமினி குழு புதிய கட்சி ஆரம்பிக்கும்

(கொழும்பு)

ஐ. தே. கட்சி அதிருப்தியாளர்களான லலித், காமினி ஆகியோர் புதிய கட்சி ஒன்று ஆரம்பிக்கும் சாத்தியங்கள் அதிகரித்து வருவதாக கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி ஐ. தே. கட்சி அதிருப்தியாளர்கள் புதிய கட்சி ஒன்று ஆரம்பிக்கும் பட்சத்தில் ஸ்ரீ. ல. சு. கட்சி அதிருப்தியாளர்களும் புதிய கட்சியில் சேர்ந்து கொள்ளக்கூடும் எனவும் செய்திகள் பரவலாக அடிபடுகின்றன. (க)

### நிலைமையை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ஆதர் வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு பட்டாளங்கள் தெரிவிக்கும் தகவலைப் பொறுத்தே வடக்கு-கிழக்கில் இப்பரீட்சையை நடாத்துவது தொடர்பாக இறுதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

எனினும் நிலைமை சாதகமானால் இப்பகுதியில் பரீட்சையை நடாத்துவதற்கான சகல ஒழுங்குகளையும் திணைக்களம் முன்னேற்பாடாக மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

### சார்க்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தி நிறுவனங்கள் வெளியிட்ட அறிக்கை குறித்தே தற்போது உர்ஜிதப்படுத்தப்பட்ட செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கான இலங்கையிலுள்ள உயர் ஸ்தானிகர் திரு. ஜா, பிரதமரின் விஜயம் பற்றி புதுடில்லியில் சகல ஏற்பாடுகளையும் செய்து பின் கொழும்பு திரும்பியுள்ளார்.

### புலிகளுக்கு ஆதரவாக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டதன் மூலம் இத்தகவல் கிடைத்துள்ளதாக தமிழக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை 'தமிழ் தேசிய மீட்புப்படை'யைச் சேர்ந்த 15 பேர் தமிழக பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனராம். (ஐ)

### பரீட்சை பின்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சைவ பரிபாலன சபையினரால் அடுத்த மாதம் 3ம் திகதி நடைபெறவிருந்த சைவசமய பாடப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் 10ம் திகதிக்கு பின்போடப்பட்டுள்ளதாக சைவ பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

பரீட்சார்த்திகளுக்கு ஏற்கனவே சுட்டிலக்கங்கள் அனுப்பப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### மத்திய கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளது.

இம்மாநாட்டில் பங்குபற்ற ஏற்கனவே சோவியத் ஜனாதிபதியும், அமெரிக்க ஜனாதிபதியும் மட்ரிட் நகர் வந்துள்ளனர்.

மாநாட்டில் இஸ்ரேல், சிரியா, லெபனான், ஜோர்தான் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் பலஸ்தீனியர்களும் கலந்துகொள்வார்கள்.

அமெரிக்கா, சோவியத் நாடுகளின் முயற்சியின் பயனாக இம்மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

### மூன்று காவலரண்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு:

303 ரக துப்பாக்கி 01, அதற்குரிய ரவைகள் - 50, தொலைத்தொடர்பு கருவி 01, 7.62 நடுத்தர ரவைகள் 450, ஏ. கே. ரக துப்பாக்கிகள் 03 ஆகியனவாகும். (க)

### 'அகதிகளாயுள்ள' அரச ஊழியரை முதலில் அழைத்துவர ஏற்பாடு

(கொழும்பு)

இந்தியாவில் தங்கியுள்ள அகதிகளில், அரச ஊழியர்களையே முதலில் திருப்பி அழைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தியாவில் உள்ள சுமார் 800 அரச ஊழியர்களையும் திருப்பியழைத்து, உப்புவெளியில் இரண்டு ஹோட்டல்களில் தங்கவைக்கப் புனர்வாழ்வு அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தலைமன்னாரில், இதற்கென இறங்குதுறைக் கட்டடம் உட்பட பல இடங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (ஐ)

## விஷமிகளால் பம்பாய் மைதானம் கொத்திக் கிளறப்பட்டது

(பம்பாய்)

பம்பாயிலுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதான 'பிட்ச்' விஷமிகளால் கொத்திக் கிளறப்பட்டு முற்றாக நாசமாக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணி பம்பாயில் சர்வதேச ஒரு நாள் போட்டியில் கலந்துகொள்வதைத் தடுக்கும் பொருட்டே இந்த நாசவேலை இடம்பெற்றுள்ளது. ஏற்கனவே இதற்கான எச்சரிக்கையை சிவசேனா கட்சி விடுத்திருந்தது.

இந்த அச்சுறுத்தலால் பாகிஸ்தான் அணி தனது விஜயத்தை ரத்துச் செய்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஒக்டோபர் 30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number [illegible]